தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### முல்லைப் பெரியாறு அணையில் பொதுப்பணித் துறை ஆய்வாளர் குழு ஆய்வு



**கம்பம்,**

முல்லைப் பெரியாறு அணையில் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, நீர்மட்டத்தை உயர்த்தும் நடவடிக்கையை சென்னை பொதுப்பணித் துறை பணிமனை ஆய்வாளர் தலைமையில் 15 பேர் கொண்ட குழுவினர் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ள உச்ச நீதிமன்றம் கடந்த மே 7 ஆம் தேதி தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன் தமிழக பொதுப்பணித் துறையினர் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து கேரளத்துக்கு உபரி நீராக வெளியேறும் 13 ஷட்டர்களுக்கும் கிரீஸ் போடும் பணியையும், ஷட்டர்களை மேலும் கீழும் இறக்கி சோதனை செய்தனர். அதோடு, 152 அடி தண்ணீர் தேக்கும் அணையில் 142 அடி அளவீடுகள், 13 ஷட்டர்களிலும் குறிக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த பணிகளை ஆய்வு செய்வதற்காக திங்கள்கிழமை சென்னையிலிருந்து பொதுப்பணித் துறை பணிமனை ஆய்வாளர் தலைமையில், 15 பேர் கொண்ட

குழுவினர் பெரியாறு அணைக்கு வந்தனர். இக் குழுவினர் ஷட்டர்களை மனித ஆற்றலால் இயக்குவது, மின்சாரம் மூலம் இயக்குவது குறித்தும், 142 அடியாக உயர்த்துவதற்கு தேவையான பணிகள் குறித்தும் ஆய்வு செய்தனர். மேலும், ஒருவாரம் அணையில் முகாமிட்டு பணியை மேற்கொள்ள இருப்பதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முல்லைப் பெரியாறு அணையில் கடந்த 14 ஆண்டுகளாக, மின்சாரத்தை கேரள மின் வாரியம் துண்டித்து வைத்துள்ளது. அணைக்குத் தேவையான மின்சாரத்தை தமிழக அதிகாரிகள் சூரிய மின்சக்தியிலும், சப்தம் இல்லாத ஜெனரேட்டர்கள் மூலமாக உற்பத்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

13 ஷட்டர்களை கீழே இறக்குவதற்கு தேவையான ஜெனரேட்டர்களை பயன்படுத்துவது குறித்தும் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

## பருவ மழை தொடங்கியதால் இனி வெயில் குறைய வாய்ப்பு

**சென்னை,**

அந்தமான் கடல் பகுதியில் தென்மேற்கு பருவமழை தொடங்கியதையடுத்து தமிழகத்தில் வெயிலின் தாக்கம் படிப்படியாகக் குறையும் என்று வானிலை மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு மே 4-ஆம் தேதி தொடங்கிய கத்திரி வெயில் வரும் 28-ஆம் தேதி வரை நீடிக்கும். மழையுடன் கத்திரி தொடங்கியதால் முதல் ஒரு வாரம் கத்திரி வெயிலின் தாக்கம் தமிழகத்தில் குறைவாக இருந்தது. ஆனால், தமிழகத்தில் கடந்த சில நாள்களாக அனல் காற்றுடன் கூடிய வெப்பநிலை வாட்டி வருகிறது.

சென்னை, மதுரை, சேலம், தருமபுரி உள்பட 8 இடங்களில் திங்கள்கிழமை (மே 19) 100 டிகிரிக்கும் மேல் வெயில் பதிவானது. மாநிலத்தின் பிற இடங்களிலும் 95 டிகிரிக்கும் மேல் வெப்பநிலை இருந்தது. இந்நிலையில் அந்தமான் கடல் பகுதியில் பருவமழை தொடங்கியிருப்பதால், அடுத்து வரும் நாள்களில் வெயிலின் தாக்கம் குறையும் என்று கூறப்படுகிறது. ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழைக் காலமாகும். நாட்டின் 75 சதவீத மழைப் பொழிவு தென்மேற்கு பருவ மழைக் காலத்தை நம்பியே உள்ளது.

ஆண்டுதோறும் மே 20-ஆம் தேதியன்று அந்தமான் கடல் பகுதியில் தென் மேற்கு பருவ மழைக் காலம் தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு 2 நாள்களுக்கு முன்பாகவே அதாவது மே 18-ஆம் தேதியன்றே பருவ மழை தொடங்கியதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக கேரளத்தில் ஜூன் 1-ஆம் தேதி முதல் பருவ மழை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த சமயத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தமிழகப் பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

பருவமழை தொடங்குவதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகும்போதே மாநிலத்தின் வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் கூறியது:

சென்னையில் திங்கள்கிழமை கடல் காற்று அதிகமாக வீசியது. இதனால் நகரில் வெப்பத்தின் தாக்கம் ஓரளவு குறைந்திருந்தது. கத்திரி வெயிலின் தாக்கம் குறையத் தொடங்கியதாலும், பருவமழைக் காலம் ஆரம்பித்ததாலும் அடுத்து வரும் நாள்களில் மாநிலத்தின் வெப்பநிலை படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பச் சலனம் காரணமாக செவ்வாய்க்கிழமை (மே 20) தமிழகத்தின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## திருப்புவனம் பகுதிகளில் கோடை விவசாயப் பணிகள் மும்முரம்

**திருப்புவனம்,**

திருப்புவனம், திருப்பாச்சேத்தி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் கோடை விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், பூவந்தி ஆகிய பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் கோடைப் பயிர்களான கத்தரி, வெண்டை, எள், பருத்தி, சோளம், கம்பு போன்ற பயிர்களை விதைப்பு அல்லது நடவு செய்வது வழக்கம்.

கடந்த சில மாதங்களாக மழை பொய்த்துப் போனதால் பருவ மழையின்றி விவசாயம் பாதிக்கப்பட்டது.

கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயிகள் அனைவரும் வருமானத்துக்காக கட்டடம், தொழிற்சாலை உள்ளிட்ட நிரந்தரமில்லா கூலி வேலைக்குச் சென்று வந்தனர்.

இந்நிலையில் கடந்த 15 நாள்களுக்கு முன் வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் தென்மாவட்டங்கள் முழுவதும் நல்ல மழை பெய்தது. இதனால் ஏற்கனவே பயிரிடப்பட்ட நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு போதிய நீர் கிடைத்தும், கண்மாய், குளம், சிறுபள்ளம் ஆகியவற்றில் நீர் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும் சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் பெய்யும் மழையை நம்பி விவசாயிகள் கோடை கால விவசாயமாக கத்திரி, வெண்டை, பருத்தி, எள், சோளம் உள்ளிட்ட பயிர்களை விதைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபற்றி சல்பனோடை விவசாயிகள் சி. ஆறுமுகம், கே. பாண்டி கூறியது: கடந்த சில நாள்களாக பெய்த மழையை நம்பி கோடை பயிர் விதைப்பதற்காக உழவு பணிகளை மேற்கொண்டு வருகிறோம். நிலம் நல்ல முறையில் பதப்பட்டவுடன் பருத்தி, எள், கத்திரி, வெண்டை உள்ளிட்ட விதைகளை நன்முறையில் பக்குவப்படுத்தி நடவு செய்வோம். பின்னர் இப்பயிர்கள் அனைத்தும் 3 மாதங்களில் விவசாயிகளுக்கு நல்ல பலனளிக்கும் என்றனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் கோடை உளுந்து விதை வழங்கல்

**கமுதி,**

கமுதி பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் கோடை உளுந்து விதை வழங்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கமுதி வட்டார வேளாண் துறை துணை இயக்குனர் வே. ஜெயச்சந்திரா, திங்கள்கிழமை கூறியது: கமுதி பகுதி ஊர்களில் சமீபத்தில் கோடை மழை அதிகமாக பெய்துள்ளது. ஒரே நாளில் 70 மி.மீ. அளவு மழை பெய்திருந்தது குறிப்பிடத்தக்கது ஆகும். மழையால் கண்மாய்களில் ஓரளவு தண்ணீ0ர் பெருகி

உள்ளது. எனவே கமுதி வட்டாரத்தில் கோடை விவசாயமாக உளுந்து, பாசிப் பயறு போன்றவற்றை சாகுபடி செய்யும் வாய்ப்பு உள்ளது. கோடை காலத்தில் பயறு வகைகளைப் பயிரிட ஏற்ற பருவ காலம் மே மாதம் ஆகும். 65 நாள்கள் முதல் 70 நாள்களுக்குள் குறைந்த அளவு தண்ணீரைப் பயன்படுத்தி, நல்ல மகசூலைப் பெறலாம். எனவே சித்திரைப் பட்டம் குறுகிய பருவகால ரகமான வம்பன்- 3 மற்றும் வம்பன்- 4 வகை உளுந்து விதைகளைப் பயிரிடப் பரிந்துரை செய்யப்படுகிறது. இந்த ரக உளுந்து விதைகள், கமுதி வட்டார வேளாண் விரிவாக்க அலுவலகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1 கிலோவுக்கு ரூ.20 மானிய விலையில் இந்த உளுந்து விதைகள், விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

எனவே கமுதி வட்டார விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, கிலோவுக்கு ரூ.20 மானிய விலை தள்ளுபடியில் விற்கப்படும் வம்பன்- 3, வம்பன்- 4 ரக கோடை உளுந்து விதைகளை வாங்கி பயிரிட்டு, அதிக மகசூல் பெற்று, அதிக விவசாய வருமானம் அடையும்படி கேட்டு6க் கொள்ளப்படுகின்றனர் என்றார்.

## சேவூரில் ரூ. 10.64 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில், விலை அதிகரித்து, ரூ. 10.64 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது .

இந்தவாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, 1000 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,000 முதல் ரூ. 4,210 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,700 முதல் ரூ. 3,950 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை ரூ. 3,300 முதல் ரூ. 3,650 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 10.64 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 10 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 183 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் (பொறுப்பு) கூறுகையில், சென்ற வாரத்தை விட வரத்து 500 மூட்டைகள் குறைவாக இருந்தாலும், குவிண்டாலுக்கு ரூ. 400 வரை விலை அதிகரித்திருந்தது என்றார்.

## <u>கறிக்கோழி பண்ணைகொள்முதல் விலை வீழ்ச்சி</u>

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 75 ஆக இருந்தது. கோழி இறைச்சி விற்பனைக் குறைவால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 73 ஆக விலையை குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.25, சென்னையில் ரூ. 3.57.

## <u>கடம்பூர் மலைப் பகுதியில் மரவள்ளி நடவு தீவிரம்</u>

**சத்தியமங்கலம்,**

கடம்பூர் மலைப் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள், மரவள்ளி நடவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சத்தியமங்கலத்தை அடுத்த கடம்பூர் மலைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 2,500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இதனால், இங்கு குளிர்ந்த தட்ப வெப்பநிலை நிலவுவதால் கடம்பூர், கல்கடம்பூர், இருட்டிபாளையம், பசுவனாபுரம், கரளையம், குன்றி, மாக்கம்பாளையம் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில்

மலைக் காய்கறிகளான உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ருட், கேரட் வகைகளும், மரவள்ளிக்கிழங்கும் சாகுபடி செய்கின்றனர்.

சில மாதங்களாக சரிவர மழை பெய்யாததால் விவசாயம் பாதிக்கப்பட்டது. தற்போது, இப்பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் மானாவாரி நிலங்களில் டிராக்டர்களைப் பயன்படுத்தி உழவுப் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலான விளை நிலங்களில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவதற்கு கரணைகள் நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து, பசுவனாபுரத்தைச் சேர்ந்த விவசாயி ராஜன் கூறியது:

தற்போது பெய்துள்ள மழையைப் பயன்படுத்தி மரவள்ளிக் கரணைகளை நடவு செய்து வருகிறோம். உழவு செய்யப்பட்ட நிலத்தில் ஈரப்பதம் உள்ளதால் செடிகள் துளிர்விட்டு வளர்ந்து விடும். இதற்காக ஒன்றரைக்கு ஒன்றரை அடி இடைவெளியில் கரணைகள் நடப்படுகின்றன. தொடர்ந்து மழை பெய்தால் செடி நன்கு வளர்ந்துவிடும். இரண்டு மாதத்தில் களையெடுத்து உரமிடுவோம். 10 மாதப் பயிரான மரவள்ளிக் கிழங்கு முன்பு டன் ரூ.5 ஆயிரம் வரை விற்றது. தற்போது ரூ.12 ஆயிரம் வரை விற்பதால் கடம்பூர் விவசாயிகள், மரவள்ளி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றார்.

## "உழவர் மன்றம் தொடங்கினால் நபார்டு நிதி உதவி

**பெருந்துறை,**

உழவர் மன்றங்களை விவசாயிகள் தொடங்கினால் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ள நபார்டு வங்கி நிதி உதவி வழங்கும் என்று, ஈரோடு மாவட்ட நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சந்தானம் தெரிவித்தார்.

சென்னிமலையை அடுத்துள்ள பனியம்பள்ளி கிராம ஊராட்சி, தொட்டம்பட்டியில் நந்தவனம் உழவர் மன்றம், கோணக்காட்டுபுதுார் இளந்தென்றல் உழவர் மன்றம், ஆண்டிகாட்டுப்புதுார் விழுதுகள் உழவர் மன்றம், உதயம் நகர் வரசித்தி விநாயகர் உழவர் மன்றம், தொட்டம்பட்டி பசுமைப் படை உழவர் மன்றம், முத்திராண்டிபாளையம் சர்வசித்தி விநாயகர் உழவர் மன்றம், மோளக்கவுண்டன்கோவில் உழவர் மன்றங்கள் தொடக்க விழா மற்றும் வேளாண்மை கருத்தரங்கம் நபார்டு வங்கி உதவியுடன் சென்னிமலை அன்னை

சோசியல் வெல்பேர் அண்டு அவேர்னஸ் டிரஸ்ட் (அஸ்வத்) சார்பாக நடைபெற்றது.

அஸ்வத் நிறுவன மேலாண்மை இயக்குநர் செல்வராஜ் தலைமை வகித்தார். செயல் இயக்குநர் சிவகுமார் வரவேற்றார். உழவர் மன்றங்களைத் தொடங்கி வைத்து நபார்டு வங்கி மாவட்ட உதவிப் பொது மேலாளர் சந்தானம் பேசுகையில், விவசாயிகள் நலனுக்காக நபார்டு வங்கி கிராமம்தோறும் உழவர் மன்றங்களைத் தொடங்கி, நிதி உதவியும் வழங்கி வருகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தைச் சீர்செய்யவும், நவீன வேளாண்மை உத்திகளைக் கற்றுத்தரவும், விவசாயிகள் புதிய, புதிய தொழில் நுட்பங்களை வெளி மாவட்டத்திற்கோ, வெளி மாநிலத்திற்கோ சென்று அறிந்து வரவும் நபார்டு நிதி உதவி வழங்குகிறது. உழவர் மன்றங்கள் தொடங்கினால் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ரூ.10 ஆயிரத்திற்கு மிகாமல் நிதி உதவி வழங்கப்படும் என்றார்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராசு பேசுகையில், விவசாயிகள் வாங்கிய கடனை உரிய தவணைகளில் திரும்பச் செலுத்தினால் வட்டிச் சலுகை வழங்குகிறோம். மேலும், விவசாய பண்ணைகள் அமைக்கவும் கடன் வழங்குகிறோம் என்றார்.

அரச்சலூர் வனவியல் விரிவாக்க மைய வனவர் பிரபாகரன் பேசுகையில், விவசாயிகள் தரிசு நிலங்களிலும், வயல் வெளிகளின் வரப்பு ஓரங்களிலும் மரக்கன்று வளர்க்க

வேண்டும். அதற்கு, வனவியல் விரிவாக்க மையம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்குகிறது. மரம் வளர்ப்பில் ஈடுபட்டு பல்லுயிர்களின் பெருக்கத்திற்கும் விவசாயிகள் வழிசெய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயம் செழிக்கும் என்றார்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் கவிதா, சென்னிமலை வட்டார வேளாண்மை அலுவலர் ராஜாத்தி, தோட்டக் கலை கள அலுவலர் பிரபு, சண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அஸ்வத் சமூக சேவை நிறுவன திட்ட அலுவலர் கதிர்வேல் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை அஸ்வத் செயலாளர் தங்கமணி, இயக்குநர் நல்லதம்பி, தங்கராசு செய்திருந்தனர்.

## இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் ஒசூரில் மலர் சாகுபடி

**ஒசூர்,**

இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்பத்தில் ஒசூர் அருகேயுள்ள கொட்டூரில் மலர் சாகுபடிக்கான தொழில் பயிற்சி மையம் தொடங்கப்படுவதை அடுத்து, அந்த நாட்டின் தூதரக அலுவலர்கள் திங்கள்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்தியா- இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே கடந்த 2008-இல் விவசாயத் துறையில் இரு நாடுகளுக்கு இடையே தொழில்நுட்பத்தை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இதன்படி, இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்பத்தில் இந்திய விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க இந்தியா முழுவதும் ஆந்திரம், கர்நாடகம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட 30 இடங்களில் பயிற்சி மையம் தொடங்கப்பட உள்ளது. தற்போது இதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அருகேயுள்ள கொட்டூரில் மலர் சாகுபடிக்கான பயிற்சி மையமும், திண்டுக்கல் மாவட்டத்தில் காய்கறி சாகுபடிக்கான பயிற்சி மையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகேயுள்ள கொட்டூரில் ரூ.8.80 கோடியில் 55 ஏக்கரில் மலர் சாகுபடி பயிற்சி மையத்துக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில், இஸ்ரேல் நாட்டு தூதரக அலுவலர் மேனகம் கனாபி, விவசாயத் துறை ஆலோசகர் டேனியல் வார்னர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, அவர்கள் ஒசூரில் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் ஒசூரில் விவசாயிகள் அதிக அளவில் மலர் சாகுபடி செய்து வருகின்றனர். ஜெருபரா, ரோஜா மலர்கள், கார்னேஷன், டிரெசினா, பாம் லீவ்ஸ், சேங் ஆப் இந்தியா, சேங் ஆப் சமேக்கா, அஸ்பிரகாஸ், லிமோனியம் உள்ளிட்ட பல வகையான மலர்களை சாகுபடி செய்து வருகின்றனர். இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்பத்தில் ஒசூர் அருகேயுள்ள கொட்டூரில் 55 ஏக்கர் நிலப்பரப்பில் மலர் சாகுபடி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட காலத்துக்குள் இந்த மையத்தின் பணிகள் முடிந்து செயல்படத் தொடங்கும்.

இஸ்ரேல் நாட்டுத் தொழில்நுட்பத்தின் மூலம் இந்தியாவில் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக வருவாய் பெற முடியும். இதுகுறித்து பயிற்சியளிக்க இந்தியா முழுவதும் 30 இடங்களில் பயிற்சி மையம் அமைக்க உள்ளோம்.

கொட்டூரில் அமைக்கப்படும் பயிற்சி மையத்தின் மூலம் ஒசூர் சுற்றுப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மலர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்படும் என்றனர் அவர்கள்.

பேட்டியின் போது, ஒசூர் சார்-ஆட்சியர் பிரவீண் பி.நாயர், வட்டாட்சியர் அமீதுல்லா, வருவாய் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட எஸ்பி கண்ணம்மாள் தலைமையில் 200-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## இயந்திரம் மூலம் கரும்பு அறுவடை!

**சீர்காழி,**

சீர்காழியில் முதல்முறையாக இயந்திரத்தை பயன்படுத்தி கரும்பு அறுவடை செய்யும் பணி திங்கள்கிழமை நடைபெற்றது.

சீர்காழி வட்டத்திலுள்ள உமையாள்பதி, பச்சைமாதானம், பாதரக்குடி, அரசூர், கடவாசல், வடகால், காப்பியக்குடி, மணலகரம் உள்ளிட்ட 80-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 3 ஆயிரம் ஏக்கரில் கடந்த காலங்களில் கரும்பு சாகுபடி நடைபெற்று வந்தது.

காலப்போக்கில் கரும்பு அறுவடைக்கான ஆள்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் கரும்பு சாகுபடியில் முனைப்பு காட்டாமல் இருந்தனர்.

இதனால் சீர்காழி வட்டத்தில் 3 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு வந்த கரும்பு பயிர், தற்போது 500 ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், சீர்காழி கோட்ட கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் விடுத்த கோரிக்கையின்படி, தலைஞாயிறு நடிப்பிசை புலவர் கே.ஆர் .ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் பொ. ரெத்தினசாமி, சீர்காழி வட்டத்தில்

37 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கரும்புகளை இயந்திரம் கொண்டு அறுவடை செய்ய திட்டமிட்டு, அப்பணி திங்கள்கிழமை நடைபெற்றது.

இதன்படி, உமையாள்பதி கிராமத்தில் ரவிச்சந்திரன் என்பவருக்கு சொந்தமான 22 ஏக்கர் கரும்புகளும், கூத்தியம்பேட்டை கிராமத்தை சேர்ந்த சம்பந்தம் என்பவருக்கு சொந்தமான 15 ஏக்கர் கரும்புகளும் இயந்திரம் கொண்டு அறுவடை செய்யப்பட்டது.

இயந்திரம் மூலம் அறுவடை செய்வதால், விவசாயிகளுக்கு செலவும், நேரமும் குறைகிறது. சாதாரணமாக 1 டன் கரும்பை ஆள்களை வைத்து அறுவடை செய்ய 2 ஆள்கள் வீதம் 2 நாள்களுக்கு ரூ. 1600 வரை செலவாகும். ஆனால், இயந்திரத்தில் 1 டன்னுக்கு ரூ. 550 முதல் ரூ. 600 வரை மட்டுமே செலவாகிறது. மேலும், ஒரு நாளுக்கு 100 டன் வரை இயந்திரம் கொண்டு அறுவடை செய்ய முடியும். இதுகுறித்து விவசாயி ரவிச்சந்திரன் கூறும்போது, ஆள்கள் பற்றாக்குறையால் கரும்பு அறுவடை காலத்தில் அவதிக்குள்ளாகி வந்தேன். நிகழாண்டில் இயந்திரத்தின் மூலம் அறுவடை என்பது மிகுந்த பயனுள்ளதாக இருந்தது என்றார்.

## மண் பரிசோதனை செய்ய வேளாண் துறை அறிவுறுத்தல்

**திருவாரூர்,**

குறுவை சாகுபடிக்கு தயாராக உள்ள நிலத்தை மண் பரிசோதனை செய்து விவசாயிகள் பயன்பெற வேளாண்துறை ஆலோசனைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்துறை அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் தற்சமயம் உளுந்து, பயறு சாகுபடி முடிந்து குறுவை சாகுபடிக்கு நிலம் தயார் நிலையில் உள்ளது. அறுவடைக்கு பிறகு அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்யும் முன்பு மண் மாதிரிகள் எடுப்பது அவசியம். வயலில் மண்ணின் நிறம் மற்றும் மணல், களிமண், செம்மண் என மண்வகை வெவ்வேறாக இருந்தால் தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

மேட்டுப்பாங்கான பகுதி மற்றும் பள்ளப் பகுதிகளுக்கு தனித் தனியாக மண் மாதிரி எடுப்பது அவசியம். வரப்பு, வாய்க்கால் அருகிலும், எரு குவித்த இடம், மர நிழல்,

நீர் தேங்கியிருந்த இடம் முதலிய இடங்களில் மண் மாதிரி எடுக்கக் கூடாது. மண் மாதிரி எடுக்க வேண்டி ய இடங்களில் உள்ள இலைகள், சருகுகள், புல், பூண்டுகளை, மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்தி பயிருக்கு ஏற்றபடி குறிப்பிட்ட ஆழத்தில் வி வடிவில் குழி வெட்ட வேண்டும்.

செல், பயறு வகை, வேர்க்கடலை போன்ற பயிர்களுக்கு அரை அடி ஆழத்திலும், கரும்பு, பருத்தி, வாழை போன்ற பயிர்களுக்கு முக்கால் அடி ஆழத்திலும், தென்னை மற்றும் பழத் தோட்ட பயிர்களுக்கு 1, 2, 3 அடி ஆழங்களில் 3 மாதிரிகள் எடுக்க வேண்டும். வெட்டிய இடங்களில் குழிகளின் ஓரங்களில் மண்வெட்டி தகட்டால் மேலிருந்து கீழ்வரை மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும்.

ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண்ணை சேகரித்து, ஈரமாக இருந்தால் நிழலில் உலர்த்தி, சுத்தமாக பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி நன்றாக கலந்து கண்ணாடி, கல், வேர்த் துண்டுகளை அப்புறப்படுத்தி பின்பு சம பங்கீட்டு முறையில் அரை கிலோ மண்ணை சேகரித்து பாலீத்தின் பையில் போட்டு கட்டி, வேளாண்மை உதவி இயக்குநர், மண் பரிசோதனை நிலையம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருவாரூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மண் மாதிரியுடன் விவசாயி பெயர், அடையாள எண், கிராமம் மற்றும் முகவரி, நிலத்தின் பெயர், சர்வே எண், பாசன வசதி, முன் பயிரிட்ட பயிர், அடுத்து பயிரிடப்போகும் பயிர் ஆகிய விவரங்களையும் அனுப்ப வேண்டும்.

பாசன நீர் ஆய்வு: ஆய்வுக் கூடத்தில் விவசாயிகள் தங்கள் பாசனத்திற்கு பயன்படுத்தும் தண்ணீரை ஆய்வு செய்து அதில் உள்ள உப்புத் தன்மை அளவுகனை தெரிந்து கொள்ளலாம். இதற்கு தண்ணீர் மோட்டாரை அரை மணி நேரம் ஓடவிட்டு சுத்தமான 1 லிட்டர் பாட்டிலில் முழுமைக்கும் மூடிவரை காற்று இடைவெளி இன்றி தண்ணீரை நிரப்பி அன்றே ஆய்வுக்கு மேற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இதற்கான ஆய்வு கட்டணம் ரூ. 20. இந்த ஆய்வுகள் வாயிலாக பயிருக்கு தீங்கு வி ளைவிக்க கூடிய களர், உவர், அமிலம், சுண்ணாம்பு தன்மையைக் கண்டறிந்து அதற்கேற்றவாறு பயிர் ரகங்களை தேர்வு செய்து மண், நீர் மற்றும் உர மேலாண்மை உத்திகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 23-இல் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம்

**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் நாகர்கோவிலில் மே 23-ஆம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: குமரி மாவட்டத்தில் மாதம்தோறும் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் அரங்கில் நடைபெற்று வருகிறது. மே மாதத்துக்கான கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மே 23-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

இதில், கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற கோரிக்கை தினக் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களுக்கு உரிய பதில் வழங்கப்படும். மேலும் விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களும் மாவட்ட ஆட்சியரால் நேரில் பெறப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெப்பச்சலனத்தால் தமிழகத்திற்கு மழை: வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை**: 'தமிழகத்தில், வெப்பச்சலனம் காரணமாக, இன்னும் சில தினங்களுக்கு மழை நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச்சலனம் மற்றும் காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாகவே, தமிழகத்தில், ஆங்காங்கே மிதமான மழை பெய்து வருகிறது. பல பகுதிகளில், விவசாயிகள், உழவுப் பணிகளை துவங்கி உள்ளனர். தென் மேற்கு பருவமழை, அந்தமான் பகுதியில் துவங்கி உள்ள நிலையில், வெப்பச்சலனம் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்னும் இரு தினங்களுக்கு மழை நீடிக்கும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, நீலகிரி மாவட்டம், குந்தா பாலம்

பகுதியில், 1 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. அதே நேரம், தமிழகத்தின் பிற பகுதிகளில், வெப்பம் அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, வேலுாரில், 41; மதுரை, திருத்தணியில், 40 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது. சென்னையை பொறுத்தவரை, நேற்று பகலில், வெப்பநிலை அதிகரித்து காணப்பட்டது, பிற்பகல் 2:00 மணிக்கு, 38 டிகிரி வெப்பம் நிலவியது. இதனால், அனல் காற்றின் தாக்கம் அதிகரித்தது.

## இதுவரை இயல்பு மழை!

மார்ச் 1ம் தேதியில் இருந்து, நேற்று வரை, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இயல்பை தாண்டி மழை பொழிவு கிடைத்துள்ளது. புதுச்சேரியில், இயல்பை காட்டிலும், 114 சதவீதமும், தமிழகத்தில் இயல்பை ஒட்டி, 12 சதவீதமும் மழை பதிவாகி உள்ளது. தமிழகத்தில், கடலுார், நாகை, நெல்லை மாவட்டங்களில், இயல்பை காட்டிலும், 100 சதவீதத்திற்கும் அதிகமான மழை பொழிவு கிடைத்துள்ளது. திருவாரூரில், 90; ராமநாதபுரம், 65; சிவகங்கை, 51; துாத்துக்குடி,50; நீலகிரி, 47 சதவீத மழை அதிகமாக கிடைத்துள்ளது. சென்னையை பொறுத்தவரை, இயல்பை காட்டிலும், 27 சதவீதம் அளவிற்கு மழை குறைந்துள்ளது. ஈரோடு, தர்மபுரி, திருவள்ளூர், காஞ்சிபுரம் பகுதிகளிலும், இயல்பை காட்டிலும் மழை குறைந்துள்ளது.

## குறுவை சாகுபடிக்கு மானியம் இரண்டு மடங்காக அதிகரிப்பு

**திண்டுக்கல்**: குறுவை சாகுபடியை அதிகரிப்பதற்காக அனைத்து விதைநெல் ரகங்களுக்கும் இரண்டு மடங்கு மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வறட்சியினால் கடந்த ஆண்டு நெல் சாகுபடி பரப்பளவு தமிழகத்தில் குறைந்திருந்தது. தேவையை பூர்த்தி செய்வதற்காக, பிற மாநிலங்களிலிருந்து நெல், அரிசி அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது கோடை மழையை தொடர்ந்து பருவமழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், குறுவை சாகுபடிக்கான பணிகள் துவக்கப்பட்டுள்ளன. அதிகபட்சமாக 115 நாட்களில் அறுவடைக்கு வரும் ரகங்களான ஆடுதுரை 43, அம்பாசமுத்திரம் 19, பிபிடி 5204, வெள்ளை பொன்னி விதை நெல்கள், அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு, இதே ரகங்களை சேர்ந்த விதை நெல், கிலோவிற்கு ரூ. 5 மானியம்

வழங்கப்பட்டது. தற்போது சாகுபடி பரப்பளவை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக கிலோவிற்கு ரூ. 10 மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏக்கருக்கு தேவைப்படும் 8 கிலோ விதை நெல்லை மானியத்துடன் ரூ. 200 க்கு விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். இதே அளவில், விதை நெல்லை வெளிமார்க்கெட்டில் வாங்க வேண்டுமென்றால், விவசாயிகள் ரூ. 400 செலவழிக்க வேண்டும். உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக, விதை நெல் உட்பட விவசாயிகளுக்கு தேவையான அனைத்து இடு பொருட்களையும் மானியத்தில் தொடர்ச்சியாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மாறி வரும் உணவு முறை: சிறுதானிய சாகுபடி அதிகரிப்பு

தேனி: மக்களிடம் மாறி வரும் உணவு முறைகளால், சிறுதானியங்களின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் சிறுதானிய சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

முக்கிய உணவாக அரிசி மாறியதில் இருந்தே, சிறுதானிய உற்பத்தி பெருமளவில் சரிந்து விட்டது. மிகக் குறைவான இடங்களில் விளையும் சிறுதானியங்களும் கோழி உணவு, மாட்டுத் தீவனங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தன. சர்க்கரை நோய், இருதய நோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருகிறது. டாக்டர்களும் அரிசி உணவை குறைத்து, சிறுதானிய உணவுகளை சேர்த்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்குகின்றனர். இதனால் சிறுதானியங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. அரிசி விலைக்கு இணையாக சிறுதானியங்களுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. தற்போதைய நிலையில் வரகு, சாமை, தினை, குதிரைவாலி போன்றவற்றின் விலை கிலோவிற்கு 30 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கிறது. சோளம், மக்காச்சோளத்திற்கும் நல்ல விலை கிடைக்கிறது. மழையும், மண் வளமும் குறைந்து விட்ட நிலையில், நெல் விளைச்சலுக்கு அதிக செலவாகிறது. ஆனால் சிறுதானிய சாகுபடிக்கு செலவு குறைவு. நோய் தாக்குதல் இல்லாததாலும், குறைந்த மழை கிடைத்தாலும், குறைந்த மண் வளத்திலும் சிறுதானிய பயிர்கள் வளர்கிறது. சாகுபடியின் போது, இதற்கான பராமரிப்பு செலவுகளும் குறைவு. எனவே, தற்போது பல விவசாயிகள் மீண்டும் சிறுதானிய சாகுபடிக்கு மாறி வருகின்றனர். விவசாயத்துறையும் செயல்விளக்க திடல்கள்

அமைத்து, விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளும் வழங்கி சிறு தானிய சாகுபடியை ஊக்குவித்து வருகிறது.

**எல்லை தாண்டினால் எச்சரிக்கும் 'மீனவ நண்பன்': மீனவர்கள் கண்காட்சியில் விளக்கம்**



**சென்னை**: "மீனவ நண்பன் என்ற புது மென்பொருள், எல்லை தாண்டி செல்வோரை எச்சரிப்பதுடன், இயற்கை சீற்றங்கள் குறித்த தகவல்களை முன்கூட்டியே தரும்," என, ஆராய்ச்சியாளர் சுவிதா கூறினார்.

தேசிய கடல் வளத்துறை தொழில்நுட்ப கழகம், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மீனவன் அறக்கட்டளையும் இணைந்து, சென்னை, காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் கண்காட்சியை நடத்தின. இதில், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின், 'மீனவ நண்பன்' என்ற, புதிய மென்பொருள் குறித்து, ஆராய்ச்சியாளர் சுவிதா கூறியதாவது: மீனவ நண்பன் என்ற புதிய மென்பொருள், எல்லை தாண்டிச் சென்றால் எச்சரிக்கும். மீன்கள் அதிகம் கிடைக்கும் பகுதிகள், தட்பவெப்ப நிலை, காற்றின் வேகம் குறித்தும், இயற்கை சீற்றங்கள் குறித்த முன் அறிவுறுத்தல்களையும் வழங்கும். 'ஆன்டிராய்டு' மொபைல் போனில், இதை பதிவிறக்கம் செய்தால், எல்லா தகவல்களையும் பெற முடியும். தொடர்ந்து, எஸ்.எம்.எஸ்., மூலமும் தகவல்கள் அனுப்பப்படும். அரசின் திட்டங்கள், வர்த்தக நிலவரங்களையும் அறியலாம். சோதனை ரீதியாக, ஐந்து மீனவர்களுக்கு தரப்பட்டது. பயன்பாடு வெற்றிகரமாக உள்ளதால், மற்ற மீனவர்களும் புது மென்பொருள் பெற ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு, அவர் கூறினார். மேலும், விசைப்படகுகளில் எரிபொருள் குறைந்தால் அலாரம் தரும் தொழில்நுட்ப

கருவி குறித்து, அண்ணா பல்கலை மாணவர்கள் விளக்கம் அளித்தனர். சோலார் வசதியுடன் விசைப்படகுகளில் மின்வசதி பெறுதல், பேட்டரி 'ரீசார்ஜ்' செய்தல் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

## மத்திய அரசில் மீன் வளத்திற்கு என தனி அமைச்சகம்?

தமிழக - இலங்கை மீனவர் பிரச்னை, குஜராத் - பாகிஸ்தான் மீனவர் பிரச்னை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு எளிதாக தீர்வு காணும் வகையில், புதிதாக அமையும் மத்திய அரசில், மீன்வளத்திற்கு என தனி அமைச்சகத்தை உருவாக்க வேண்டும் என, மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். பல்வேறு மாநிலங்களிலும், கடலோர பகுதி மீனவர்களுக்கு அச்சுறுத்தல்கள் இருந்து வருகின்றன. மீன்வளத் துறைக்கு என, தனி அமைச்சகம் இருந்தால் தான், இதற்கெல்லாம் எளிதாக தீர்வு காண முடியும் என, மீனவ அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், கடந்த கால காங்கிரஸ் அரசு இதில் கவனம் செலுத்தவில்லை. இந்த நிலையில், 'கடலோர மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்' என, பிரதமராக பதவியேற்க உள்ள நரேந்திர மோடி, தன் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்துள்ளார். தற்போது, பா.ஜ., தனிப்பெரும்பான்மையுடன் மத்தியில் ஆட்சி அமைக்க உள்ளது. பிரதமராக, மோடி பொறுப்பேற்கும் நிலையில், மீன்வளம் - மீனவர் நலனுக்கென, தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும் என, பல்வேறு மீனவ அமைப்புகளும் வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து, தேசிய மீனவர் பேரவைத் தலைவர் இளங்கோ கூறியதாவது: மீனவர் பிரச்னை குறித்து மோடி நன்கு அறிவார். தமிழகம் போன்று, குஜராத்திலும் மீனவர் பிரச்னை உள்ளது. தனி அமைச்சகம் இருந்தால், பிரத்யேக கவனம் செலுத்தி தீர்வு காண முடியும். மோடி தன் அமைச்சரவையில், மீன்வளத்திற்கு என தனி அமைச்சகம் ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கை உள்ளது. இதுவரை, மீனவர்களுக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் தந்ததில்லை. தேவகவுடா பிரதமராக இருந்தபோது, பீகாரைச் சேர்ந்த மீனவர் ஒருவர், இணை அமைச்சராக இருந்தார். மீன்வளத் துறைக்கு, மீனவர் ஒருவரை அமைச்சராக அறிவிக்க வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

**முன்னதாக துவங்கிய தென்மேற்கு பருவமழை : மேட்டூருக்கு கர்நாடக அரசு நீர் திறக்க எதிர்பார்ப்பு**

**திருச்சி**: ""முன்கூட்டியே தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளதால், மேட்டூர் அணைக்கு விரைவில் நீர் திறக்க கர்நாடக அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்,'' என, டெல்டா விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர். அந்தமானில் தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளது. வெப்பசலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் துவங்கும். இந்த ஆண்டு ஜூன், 1ம் தேதி தென்மேற்கு பருவமழை துவங்கும் என வானிலை மையம் ஏற்கனவே அறிவித்திருந்தது. மே முதல் வாரத்தில் வங்கக்கடலில் தோன்றிய காற்றழுத்தத்தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால், அக்னி நட்சத்திரத்தின் வெப்பம் தணிந்து குளிர்ந்தது. சில நாள் பெய்த மழை பின் ஓய்ந்தது.

தென்மேற்கு பருவமழையால், கேரளா, கர்நாடகா அதிக மழைப்பொழிவு பெறும். தமிழகத்தின் மேற்கு பகுதி மாவட்டங்களும் ஓரளவு மழை பெறும். இதன் மூலம் கர்நாடகா அணைகளுக்கும், மேட்டூர் அணைகளுக்கும் தண்ணீர் கிடைக்கும். கேரளாவில் வழக்கமாக ஜூன், 1ம் தேதி தென்மேற்கு பருவமழை துவங்கும். ஆனால், இந்தாண்டு வழக்கத்தை விட முன்னதாகவே தொடங்க வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதன்படி, அந்தமான் கடல் பகுதியில் தென்மேற்கு பருவமழை துவங்கிவிட்டது. அடுத்த, 48 மணி நேரத்தில் இந்த மழை தெற்கு, கிழக்கு வங்கக்கடலில் மேலும் பரவலாக பெய்யும். தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியையொட்டி உள்ள தென்காசி, செங்கோட்டை, குற்றாலம் பகுதிகளில் குளிர்ந்த சாரல் காற்று வீசுகிறது.

தவிர, வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் பல பகுதிகளில் மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது. தென்மேற்கு பருவமழையால், கர்நாடகம், கேரளாவின் வயநாடு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டால் தான் கர்நாடக அணைகள் நிரம்பி மேட்டூருக்கு தண்ணீர் வரத்துவங்கும். மேட்டூரில், 35 அடி தண்ணீரே உள்ளது.

வழக்கமான மழையாக இருந்தால், 20 நாள் வரை கர்நாடக அரசு தனது அணைகளில், நீர் நிரப்பிய பின் தான் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கும். கர்நாடக

அணைகள் வேகமாக நிரம்பினால், மேட்டூர் அணைக்கு நீர் விரைவில் திறக்கப்படும். இல்லையேல், ஜூன் கடைசியில் தான் நீர் கர்நாடக அரசு மேட்டூர் அணைக்கு நீர் வழங்கும்.

தமிழகத்தில் டெல்டா குறுவை சாகுபடிக்கு, ஜூன், 12ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். இந்தாண்டு பருவமழை பலமாக பெய்து, கர்நாடக அணைகள் வேகமாக நிரம்பினால் மட்டுமே மேட்டூர் அணைக்கு தண்ணீர் கிடைக்கும். இல்லையேல், ஜூன் இறுதியில் தான் மேட்டூர் அணைக்கு கர்நாடக அரசு நீர் வழங்கும். இதுகுறித்து பாரதிய கிஷான் சங்க மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு கூறியதாவது: காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி, ஒவ்வொரு மாதமும் இவ்வளவு தண்ணீர் மேட்டூர் அணைக்கு கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். இத்தீர்ப்பு, மத்திய அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மத்தியில் புதிய அரசு அமைந்துள்ளது. லோக்சபா தேர்தலில், அ.தி.மு.க.,வும் தமிழகத்தில் பெரும்பான்மை பெற்றுள்ளது. காவிரி நதிநீர் ஆணையத்தின் கண்காணிப்புக்குழு தலைவராக நான்கு நாட்களுக்கு முன் உச்சநீதிமன்ற நீதிபதி சவுகா நியமிக்கப்பட்டுள்ளார். நீதிபதி சவுகாவிடமும், புதிய மத்திய அரசிடமும் தமிழக அரசு அழுத்தம் கொடுத்து, மேட்டூர் அணைக்கு, உரிய நேரத்தில் நீர் திறக்க கர்நாடக அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். முன்கூட்டியே தென்மேற்கு பருவமழை பெய்துள்ளதால் கர்நாடக அணைகள் நிரம்பும். எனவே, இதை நாம் பயன்படுத்தி இப்போதே நீர்திறப்பை வலியுறுத்த வேண்டும். இரண்டு ஆண்டாக முறையாக தண்ணீர் திறக்காததால், தமிழகத்தில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது. இந்தாண்டும் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆத்தூர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.5 கோடிக்கு பருத்தி ஏலம்

**ஆத்தூர்**: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 23 ஆயிரம் மூட்டை பருத்தி, ஐந்து கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் மற்றும் தானியம், எண்ணெய் வித்துகள் ஏலம் நடத்தப்படுகிறது.

நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திட்டக்குடி, பெரம்பலூர் பகுதியில் இருந்து, 1,350 விவசாயிகள், 23 ஆயிரம் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆத்தூர், திருப்பூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி பகுதியை சேர்ந்த, 25 வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்தியின் தரத்துக்கு ஏற்ப, விலை நிர்ணயம் செய்தனர். அதில், டி.சி.ஹெச்., ரக பருத்தி, ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 6,689 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 5,469 ரூபாய்க்கும், பி.டி., ரகம் அதிகபட்சம், 5,559 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 4,019 ரூபாயக்கும் விற்பனையானது. மொத்தம், ஐந்து கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வாரத்தை விட, பருத்திக்கு, 200 முதல், 300 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மாவட்டத்தில் 6,900 ஏக்கரில் மரவள்ளி சாகுபடி தொடர் வறட்சியால் பரப்பளவு குறைந்தது

**விருத்தாசலம்**: கடலூர் மாவட்டத்தில் தொடர் வறட்சியால் மரவள்ளி சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது. பத்து மாத பயிரான மரவள்ளி, ஜனவரி - பிப்ரவரி, நவம்பர் - டிசம்பர் ஆகிய இரண்டு பட்டங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, விருத்தாசலம், மங்களூர், நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கார்த்திகை பட்டத்தில் வேர்க்கடலையில் ஊடுபயிராக 6,900 ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேர்க்கடலை அறுவடைக்குப் பின் களையெடுத்து, உரமிட்டு பாசனத்துடன் பராமரித்து வருகின்றனர். அதில், முள்ளுவாடி - 1, முள்ளுவாடி- 2, முள்ளுவாடி - 3, எச் - 165, எச் - 226, எம் -4, குங்குமரோஸ் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் பயரிடப்பட்டுள்ளன. ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய விதைப் புள், ஆட்கூலி, உரம், பூச்சிக்கொல்லி என 30 முதல் 40 அயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 10 முதல் 15 டன் வரை மகசூல் கிடைக்கிறது. மாவட்டத்தில் அறுவடை செய்யும் மரவள்ளி கிழங்குகளை சேலத்திலுள்ள ஜவ்வரிசி தயாரிக்கும் நிறுவனங்கள் அதிளவில் வாங்கிச் செல்கின்றன. மேலும், ஆரோரூட் மாவு, மாட்டுத் தீவனம், சிப்ஸ் உள்ளிட்ட பொருட்களும் தயாரிக்கப் பயன்படுகிறது. அறுவடைக் காலங்களில் ஜவ்வரிசி ஆலை நிர்வாகத்தினர், நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். குறைந்த

பராமரிப்பு செலவில் அதிக வருவாய் தரும் மரவள்ளியை பயிரிட விவாயிகள் ஆர்வமாக இருந்தாலும், தொடர் வறட்சியால் கடந்தாண்டை விட இந்தாண்டு சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "கடலூர் மாவட்டத்தில் வழக்கமாக ஆண்டுதோறும் 9 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மரவள்ளி சாகுபடி செய்யப்படும். ஆனால், கடந்தாண்டு 7,400 ஏக்கரிலும், இந்தாண்டு 6,900 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நிலவும் கடும் வறட்சியால் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருகிறது. மங்களூர், நல்லூர் பகுதிகளில் தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் 25 சதவீத விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்தில் சாகுபடி செய்கின்றனர். இதனால், 20 முதல் 25 சதவீதம் வரை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றார்.

## வெள்ளாடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

**கச்சிராயபாளையம்**: கச்சிராயபாளையம் பகுதியில் வெள்ளாடு வளர்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கச்சிராயபாளையம் பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் உள்ளனர். விவசாயம் மேற்கொள்வதுடன் கால்நடை வளர்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறைந்த செலவில் அதிக லாபம் கிடைப்பதாலும் பராமரிப்பது எளிமையாக இருப்பதாலும், வறட்சி காலங்களுக்கு ஏற்ற தொழிலாக உள்ளதாலும் கொட்டகை முறையில் வெள்ளாடுகளை வளர்த்து வருகின்றனர். ஆடுகளுக்கு அதன் எடைக்கு ஏற்ப பசுந்தீவணம், அடர் தீவணம் அளிக்க வேண்டும். பசுந்தீவணங்கள் கோ 3, 4 ரகங்கள்,வேலிமசால், குதிரைமசால், தீவனசோளம், புல்வகைகள், அகத்தி, சவுன்டால், சித்தகத்தி போன்றவைகளை அளிக்கலாம். பசுந்தீவணங்களின் முதல் அறுவடை 60-70 நாட்கள் ஆகும் என்பதால் கொட்டகை அமைப்பதற்கு முன்பே தீவனங்களை பயிர்செய்ய வேண்டும். 25 ஆடுகள் வளர்க்க 1 ஏக்கரில் தீவணங்கள் வளர்க்வேண்டும்.

இனங்கள் தமிழகத்தில் மலபாரி, அட்டபாடி, சேனன் மலபாரி, தலைச்சேரி, போயர் போன்ற இனங்கள் உள்ளன. வெள்ளாடு 10 -12 மாதங்களில் பருவ வயதை அடைந்து, 16-17 மாதங்களில் குட்டிகளை ஈன்று விடுவதால் வெள்ளாடுகள் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. ஒரே வகை ஆடுகளை வளர்பதை விட கலப்பின ஆடுகளை வளர்த்தால் அதிக பலனை தருவதாக விவசாயிகள் கூறுகின்னறர்.

## மழையால் மேய்ச்சல் நிலங்கள் துளிர் விடத் துவங்கியுள்ளது

**திருக்கோவிலூர்**: திருக்கோவிலூர் பகுதியில் மேய்ச்சல் நிலங்கள் வறண்டு போனதால் கால்நடைகள் உணவின்றி தவித்த நிலையை கோடை மழை மாற்றியது. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து போனது. இதனால் பல ஏரி, குளங்கள் வற்றி, கால்நடைகள் குடிக்க தண்ணீரின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டது.

சமீபகாலமாக சுட்டெறித்த கோடை வெயிலில் மேய்ச்சல் நிலங்களை வறண்டு போகச் செய்தது. இதனால் பல நிலங்கள் பாலைவனமாக காட்சியளித்தது. கால்நடைகள் போதுமான வைக்கோல் மற்றும் பசும் தீவனமின்றி தவிக்கின்றன. இது பால் உற்பத்தியை பெருமளவில் பாதிக்கச் செய்தது. ஆடு, மாடுகளை காப்பாற்றுவது எப்படி என்ற அச்சநிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். சில நாட்களாக பெய்த கோடை மழை விவசாயி களை மகிழ்வித்துள்ளது. வறண்டு கிடந்த விளைநிலங்கள் பசுமையாக துளிர்விட துவங்கியுள்ளது. இது கால்நடைகளுக்கு போதுமான மேய்ச்சலை தந்துள்ளது. உணவின்றி தவித்த கால்நடைகளுக்கு சமீபத்தில் பெய்த கோடை மழை வரபிரசாதமாக அமைந்துள்ளது.

## வேளாண் விற்பனை சங்கத்தில் ரூ. 7 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஏழு லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், 178 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 6,906 ரூபாய், குறைந்தபட்சமாக, 5,900 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5,550 ரூபாய், குறைந்தபட்சமாக, 4,679 ரூபாய்க்கு ஏலம் போனது.

ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பருத்தியை, ஏழு லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து சென்றனர்.

## கொய்மலர் மகத்துவ மைய கட்டுமான பணி இஸ்ரேல் நாட்டு அதிகாரிகள் ஆய்வு

**ஓசூர்**: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே, தரமற்ற முறையில் கட்டப்பட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டு வரும், கொய்மலர் மகத்துவக மைய கட்டுமான பணியை, இஸ்ரேல் நாட்டு அதிகாரிகள் ஆய்வு செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரை அடுத்த, தளி அருகே உள்ள, கூட்டூர் பகுதியில், 53 ஏக்கர் பரப்பளவில், எட்டு கோடியே, 80 லட்ச ரூபாய் மதிப்பில், தமிழக அரசு மற்றும் இஸ்ரேல் நாட்டு நிதியுதவியுடன், கொய்மலர் மகத்துவ மையம் கட்டப்பட்டு வருகிறது. இதுதவிர, பசுமை குடில், நிழல்வலை கூடாரம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம், விவசாயிகளுக்கு, மலர் சாகுபடி சம்பந்தமான தொழில் நுட்பங்களை கற்றுக்கொடுத்து, மலர் ஏற்றுமதி வாய்ப்பை அதிகப்படுத்தவும், தோட்டக்கலை அதிகாரிகளுக்கு, பயிற்சி அளிக்கவும், தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

பயிற்சி மைய கட்டுமான பணியை, கடந்த ஆண்டு, அக்டோபர் மாதம் முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தார். வரும், 2015ம் ஆண்டு, பிப்ரவரி மாதத்துக்குள், கட்டுமான பணியை முடிக்க வேண்டும் என, டெண்டர் எடுத்த நிறுவனத்திடம், அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. கட்டுமான பணிகள் நடந்து வரும், கூட்டுர் காட்டுப்பகுதியில், காட்டு யானைகள் வருவதை தடுக்க, அகழி தோண்டப்பட்டுள்ளது. அதில், இருந்து கிடைத்த, சுண்ணாம்பு கலந்த மண் மற்றும் பாறை துகள்கள் ஆகியவை, கட்டுமான பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக, இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பல மாதங்களாக புகார் கூறி வந்தனர். இந்நிலையில், நேற்று காலை, தளி பகுதிக்கு வந்த, இஸ்ரேல் நாட்டுக்கான இந்திய தூதர் மேனகம் கனாபி மற்றும் வேளாண்மை ஆலோசகர் டேனியல் வெர்னர் ஆகியோர் கட்டுமான பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதை கேள்விப்பட்ட பொதுமக்கள், கட்டுமான பணியை, இஸ்ரேல் நாட்டு அதிகாரிகள், சரியான முறையில் ஆய்வு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து, நீண்ட நேரம் ஆய்வு நடந்ததாக, பணியாளர்கள் தெரிவித்தனர்.

## வேளாண் பல்கலைக் கழகத்தில் சிறு தானியங்களில் உற்பத்தி பயிற்சி

கோவை : வேளாண் பல்கலைக் கழகத்தில், சிறு தானியங்களில் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்கான பயிற்சி நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலுள்ள சிறு தானியங்கள் துறை மூலம், சிறு தானியங்களில் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டுதலுக்கான பயிற்சி, வரும் 27, 28ம் தேதிகளில் நடக்கிறது. பயிற்சியில், சிறு தானியங்களின் உற்பத்தி திறனை பெருக்குவதற்கான தொழில் நுட்பங்கள் மற்றும் சிறு தானியங்களில் மதிப்பு கூட்டுதலுக்கான தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி, சிறு தானியங்கள் பயிரிடுவோர் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. விருப்பம் உள்ளோர், 'பேராசிரியர் மற்றும் தலைவர், சிறு தானியங்கள் துறை, **தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோவை'** என்ற முகவரியிலோ, 0422-2450507 என்ற தொலைபேசி எண்ணிலோ, millets@tnau.ac.in என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

## வாழையை தாக்கும் நோயை கட்டுப்படுத்த அறிவுரை

கூடலூர் : "கூடலூர், பந்தலூர் பகுதிகளில் வாழையை தாக்கும் நோயை கட்டுப்படுத்த, "பஞ்சகாவ்யா, தசக்காவ்யா' மருந்தை பயன்படுத்த வேண்டும்' என, தோட்டக்கலை துறை அறிவுறுத்தி உள்ளது.

கூடலூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கூடலூர், பந்தலூர் வட்டாரத்தில் பல பகுதிகளில் முக்கிய பயிராக வாழை பயிரிடப்பட்டுள்ளது. சமீபத்தில் எதிர்பாராத வகையில் காற்றுடன் பெய்த மழையில் வாழை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது, வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால், நோய் பரவும் அபாயமும் உள்ளது. இதனை கட்டுப்படுத்த இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட "பஞ்சகாவ்யா மற்றும் தசக்காவ்யா' ஆகியவற்றை தனித்தனியாக, 300 மில்லி லிட்டர் அளவில், 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து, 15 நாட்கள் இடைவெளி விட்டு தெளிக்க வேண்டும். முதலில், தசக்காவ்யா மருந்தையும், 15 நாட்கள் இடைவெளி விட்டு, பஞ்சக்கவ்யா மருந்தையும் தெளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான, பஞ்சகாவ்யா, தசக்காவ்யா மருந்துகள், தேவாலா பண்ணையில் வினியோகிக்கப்படுகிறது.

பஞ்சகாவ்யா லிட்டர் 90 ரூபாய்க்கும், தசக்காவ்யா லிட்டர் 100 ரூபாய்க்கும் கிடைக்கும். மேலும், விபரங்களுக்கு கூடலூர் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஒரு எலுமிச்சை ரூ.10; விலை கிடு.. கிடு..

**பெரியகுளம்** : மழை பெய்யும் நேரத்தில் வெயில் அடித்ததாலும், மிதமான வெயில் காலத்தில், காற்றோடு மழை பெய்ததாலும், எலுமிச்சை விளைச்சல் பாதித்தது. சந்தையில் ஒரு எலுமிச்சை பழம் 10 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

பெரியகுளம் அருகே, கும்பக்கரை மலைப்பகுதியான வண்ணாத்திப்பாறை, பெரியூர், சின்னூர், அகமலை, ஊரடி, ஊத்துக்காடு, பேச்சியம்மன்சோலை, அண்ணாநகர், அலங்காரம் உட்பட மலைப்பகுதிகளில், முக்கிய விவசாயமாக எலுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது. கோடை வெயிலின் தாக்கத்தால், எலுமிச்சை செடியில் பூப்பிடிப்பது தாமதமானது. மழை எதிர்பார்த்த அளவில், பெய்யாததால் சிறிய அளவில் எலுமிச்சை காயாக வந்தது. அக்னி நட்சத்திரம் துவக்கத்தில், காற்றோடு பெய்த மழையால், பூவில் மொட்டுகள் அதிகளவில் உதிர்ந்தது. இதனால் விளைச்சல் பாதித்துள்ளது. பெரியகுளம் சுதந்திரவீதியில் எலுமிச்சை கமிஷன் கடைகளில், சீசன் காலங்களில் தினமும் நூறுக்கும் மேற்பட்ட எலுமிச்சை மூடைகள் விற்பனைக்கு வரும். விளைச்சல் இல்லாததால், சில தினங்களாக 20 மூடைகள் மட்டும் வருகிறது. 30 கிலோ எடையுள்ள மூடை நான்காயிரம் ரூபாய்க்கு ஏலம் போகிறது. இதனால் சில்லரை வியாபாரிகள் மார்க்கெட்டில் ஒரு பழம் 10 ரூபாய்க்கு விற்கின்றனர். இது குறித்து விவசாயி அக்கையன் கூறுகையில்," கடந்த 50 ஆண்டுகளில், 30 காசு, ஒரு ரூபாய், அதிகபட்சமாக ஐந்து ரூபாய் விற்ற எலுமிச்சை, விளைச்சல் இல்லாததால் முதன் முதலாக 10 ரூபாய்க்கும், அதற்கு மேலும் விற்பனையாகிறது,' என்றார்.

## மானாவாரியில் பழப்பயிர் சாகுபடி செய்ய மானியம்

**தேனி** : மானாவாரியில் பழப்பயிர்கள் சாகுபடி செய்ய அரசு மானியம் வழங்கப்படுகிறது. மானாவாரி நிலங்களில், பல ஆண்டுகள் பலன் தரும் பழப்பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் மானியம்

வழங்கப்பட உள்ளது. இந்த தொகையில் ஒரு விவசாயிக்கு, அதிகபட்சம் 2 ஏக்கருக்கு தேவையான பழக்கன்றுகள், அதற்கான இடுபொருட்கள், மற்றும் விவசாயி விரும்பும் ஊடுபயிர் செய்வதற்கு தேவையான பயறுவகை விதைகள், காய்கறி விதைகள், மக்காச்சோளம் விதைகள் வழங்கப்படும். மானிய உதவிகளை பெற விரும்பும் விவசாயிகள், தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கை கொடுத்த கோடை மழையால் மகிழ்ச்சி! தென்னை விவசாயிகள் புத்துணர்ச்சி

**கீழக்கரை** : கோடை மழை "கை' கொடுத்ததால், ராமநாதபுரம் மாவட்ட தென்னை விவசாயிகள் புத்துணர்ச்சி பெற்றுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் தென்னை விவசாயம் நடக்கிறது. பெரியபட்டிணம், வாலாந்தரவை, உச்சிப்புளி, திருப்புல்லாணி, ரெகுநாதபுரம், கீழக்கரை, ஏர்வாடி போன்ற பகுதிகளில் விவசாயிகள் பல ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்ப்பால், விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்தனர். மேலும், மகசூல் பருவத்தில் பூச்சி தாக்குதலால், தேங்காய் சுருங்கி சொறி பிடித்தால், 5 ரூபாய்க்கு விற்க வேண்டிய ஒரு காய், 2 ரூபாய்க்கு விலை போனது. குறிப்பாக பெரியப்பட்டிணம், கீழக்கரை பகுதி விவசாயிகள், தோப்புகளை பராமரிக்க முடியாமல் குத்தகைக்கு விடுகின்றனர். இந்நிலையில் விவசாயிகளை மகிழ்விக்கும் வகையில் சில நாட்களுக்கு முன், கோடை மழை பெய்தது. இந்த மழை கோடை உழவுக்கு முக்கியத்துவம் பெற்றது என்றாலும், மறுபுறம் தென்னை விவசாயிகளுக்கு "கை' கொடுத்துள்ளது. திருப்புல்லாணி, விவசாயி அழகர்சாமி கூறியதாவது: இரண்டு ஏக்கரில் தென்னை விவசாயம் செய்கிறேன். பருவ மழை பொய்ப்பால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், தோப்புகளை கூட பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. சமீபத்தில் பெய்த கோடை மழை தென்னை விவசாயத்திற்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது, என்றார். வேளாண் அதிகாரி ஷேக் அப்துல்லா கூறியதாவது: சமீபத்தில் பெய்த கோடை மழை கோடை உழவுக்கு பயனுள்ளதாக உள்ளது. தவிர, தென்னை மற்றும் பருத்தி விவசாயத்திற்கு புத்துணர்வு தரும் வகையில் அமைந்துள்ளது, என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பூந்தொட்டி அமைக்கும் பணி தீவிரம் ஊட்டியில் மலர் கண்காட்சி 23ம் தேதி தொடக்கம்



**ஊட்டி** : வரும் 23ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை நடக்கவுள்ள ஊட்டி மலர் கண்காட்சிக்காக தாவரவியல் பூங்காவில் மலர் தொட்டிகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடக்கிறது. நேற்று முதல் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின.ஆண்டு தோறும் கோடை காலத்தின் போது, குளு குளு சீசனை அனுபவிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டி வருவது வழக்கம். இவர்களை மகிழ்விப்பதற்காகவும், சுற்றுலாவை மேம்பாடுத்துவதற்காகவும் ஊட்டியில் ஆண்டு தோறும் மே மாதத் தில் பல்வேறு விழாக்கள் சுற்றுலாத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் நடத்தப்படுகிறது. இதில், முக்கிய விழாவாக அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இந்தாண்டுக்கான மலர் கண்காட்சி 23ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை 3 நாட்கள் ஊட்டி தாவரவியல் பூங்காவில் நடக்கிறது. இந்நிலையில், இந்தாண்டு மலர் கண்காட்சிக்காக 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த மலர்கள் பூத்து குலுங்கும் நிலையில், மலர் கண்காட்சிக்காக அலங்கார மேடையில் பூந்தொட்டிகள் அடுக்கும் பணிகள் நேற்று துவங்கி நடந்து வருகிறது.மேலும், பல்வேறு மலர் அலங்காரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலர் கண்காட்சியை முன்னிட்டு இம்முறை மலர்க ளால் ஆன ரயில், தோடர்

பழங்குடியின மக்களின் வீடு, எருமை மற்றும் அவர்களின் குடும்பத்தை சித்தரிக்கும் வகையில் கொய் மலர்களால் ஆன அலங்காரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்நிலையில், ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கோடை விழா கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகள் நேற்று முதல் துவங்கியது.

**பூக்களின் விலை சரிவு குண்டுமல்லி கிலோ ரூ200**

**சேலம்**, : சேலத்தில் தேவை குறைந்ததால் பூக்கள் விலை சரிந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பூசாரிப்பட்டி, வீராணம், வலசையூர், காரிப்பட்டி, பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, தம்மம்பட்டி உட்பட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் குண்டுமல்லி, கனகாம்பரம், சம்பங்கி, சாமந்தி, ரோஸ், கோழிக்கொண்டை பூ, அரளி உட்பட பல்வேறு வகையான பூக்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

அறுவடை செய்யப்படும் பூக்களை விவசாயிகள் சேலம் வ.உ.சி.,மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர். கடந்த ஒரு வாரமாக கோயில் திருவிழா, முகூர்த்தம் இல்லாததால் பூக்களின் விலை குறைந்துள்ளது.

இது குறித்து வ.உ.சி., மார்க்கெட் பூ வியாபாரிகள் கூறியதாவது: சித்ரா பௌர்ணமி கழித்து பத்து நாட்கள் முகூர்த்தம், கோயில் திருவிழாக்கள் எதுவும் இருக்காது. கடந்த ஒரு வாரமாக சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து சீராக உள்ளது. ஆனால் வாடிக்கையாளர்களின் வருகை குறைந்து விற்பனை சரிந்துள்ளது. இதனால் விலையும் கணிசமாக குறைந்துள்ளது.

நேற்று நிலவரப்படி குண்டுமல்லி ரூ200க்கும், ஊசிமல்லி ரூ200க்கும், கனகாம்பரம் ரூ300 எனவும், சாமந்தி ரூ100 முதல் ரூ120 வரையும், சம்பங்கி ரூ100க்கும், அரளி ரூ60க்கும், ரோஸ் ஒரு கிலோ ரூ120க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரத்தில் குண்டுமல்லி கிலோ ரூ400க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல் மற்ற பூக்களின் விலையும் அதிகமாகவே இருந்தது. அடுத்த வாரம் அமாவாசைக்கு பிறகு கோயில் திருவிழா, முகூர்த்தம் அதிகமாக வருகின்றன. அப்போது விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு பூ வியாபாரி மோகன் கூறினார்.

**<u>வரத்து குறைவால் மிளகாய் விலை உயர்வு</u>**

**தர்மபுரி,** : தர்மபுரியில் வரத்து குறைவால் மிளகாய் விலை உயர்ந்து கிலோ ரூ.120க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் பென்னாகரம், ஏரியூர், பாப்பாரப்பட்டி, இண்டூர் பகுதிகளில் மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது தர்மபுரி சந்தைக்கு மிளகாய் வரத்து குறைந்ததால் ஆந்திர மாநிலம் குண்டூர் மற்றும் கடப்பா மாவட்டங்களில் இருந்து மிளகாய் வரத்துவங்கியுள்ளது. தர்மபுரி சந்தைக்கு வாரம் ஒன்றிற்கு ஒரு டன் மிளகாய் வரத்து உள்ளது. இருந்த போதும் வரத்து குறைவாக இருப்பதால் மிளகாய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

தர்மபுரி சந்தைப்பேட்டை ஞாயிற்றுக்கிழமை சந்தையில் ஒரு கிலோ ரூ.110 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்பட்டது. இது குறித்து நல்லம்பள்ளியை சேர்ந்த மிளகாய் வியாபாரி சாமிநாதன் கூறுகையில், பென்னாகரம் பகுதியில் இருந்து மிளகாய் வற்றல் வந்து கொண்டிருந்தது. கடந்த 3 மாதமாக மிளகாய் வற்றல் வரத்து குறைந்து விட்டது. இதனால் நாங்கள் ஆந்திரா வியாபாரிகளிடம் இருந்து மிளகாய் வற்றல்களை வாங்குகிறோம்.

மிளகாய் வற்றலில் காம்பு ஒடிக்க ஒரு கிலோவுக்கு ரூ.10 கூலி கொடுக்கிறோம். ஆந்திரா மிளகாய் வற்றல், மிகவும் காரமாக இருப்பதால் நமது ஊர் மிளகாயை விட ஆந்திரா மிளகாய் வற்றலுக்கு மவுசு அதிகமாக உள்ளது. கடந்த 3 மாதத்திற்கு முன்பு கிலோ ரூ.90க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது கிலோ ரூ.110 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

**<u>அரூரில் வரத்து அதிகரிப்பு ஒரு டன் பலாப்பழம் ரூ. 15 ஆயிரத்திற்கு விற்பனை</u>**

**அரூர்**, : தமிழகத்தில் பலாப்பழம் சீசன் துவங்கியுள்ள நிலையில், அரூரில் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், ஒரு டன் பலாப்பழம் ரூ.15 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில் விழுப்புரம், பண்ருட்டி ஆகிய பகுதிகளிலும், கேரளா மாநிலத்திலும் பலா பழம் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. தமிழக பகுதிகளில் விளைச்சல்

குறைவு என்பதால், கேரள மாநிலத்திலிருந்து அதிக அளவில் பலா பழம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்திற்கு, வாரத்திற்கு 15 லாரிகளில் பலாப்பழம் கேரளாவிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு டன் பழம் ரூ.10 ஆயிரத்திற்கு மொத்தமாக கொள்முதல் செய்து, இங்கு ஒரு டன் ரூ.15 ஆயிரம் வரை விற்பனை செய்கின்றனர். தர்மபுரி, அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் 100க்கும் மேற்பட்ட தள்ளுவண்டிகளில் வைத்து சில்லரையில் விற்பனை செய்து வருகின்றனர்.

## கூட்டுறவு வங்கிகளில் வாழை பயிருக்கு கடன் செலுத்தும் காலம் 9 மாதமாக குறைப்பு

**நாமக்கல்**, : ஒரு ஆண்டு கால பயிரான வாழை பயிருக்கு கூட்டுறவு வங்கிகளில் பயிர்கடன் செலுத்தும் காலம் 9 மாதமாக குறைத்துள்ளதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கூட்டுறவு வங்கிகளில், 2014-2015ம் ஆண்டுக்கான பயிர் கடன் அளவு மற்றும் தவணை காலம் நிர்ணயம் செய்யும் போது, வாழைப்பயிர்களுக்கான கடனை திருப்பி செலுத்தும் தவணை காலம், ஒன்பது மாதமாக தொழில்நுட்ப பரிந்துரைக்குழு நிர்ணயம் செய்துள்ளது.

ஒரு ஆண்டு பயிரான வாழை சாகுபடியில், பயிர்கடன் தவணை காலம் 9 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பது விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் புதிய நடைமுறையை கைவிட்டு பழைய நடைமுறைபடி, பயிர்கடன் தவணை காலம் 12 மாதங்கள் என தொடர வேண்டும் என பல்வேறு அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பு தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர். இந்நிலையில், தமிழக வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பாலமோகன், விஜயகுமார் ஆகியோர் மோகனூர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது, மோகனூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை ரகங்கள், சாகுபடி செலவு, பருவகாலம், வங்கி கடன் உச்சவரம்பு நிர்ணயம் குறித்து விசாரித்தனர். மேலும், கடந்த ஆண்டு சாகுபடி கடன் தவணை, வசூல் செய்த காலம் பற்றியும் விரிவான ஆலோசனை நடத்தினர். இது குறித்து தமிழக வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானி பாலமோகன் கூறியதாவது: வாழை சாகுபடியின் காலம் 12 மாதங்கள் என்ற நிலையில், விவசாயிகளுக்கான பயிர்கடன் காலம் 9 மாதங்கள் என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். வாழை சாகுபடியில் பயிரிடப்படும் வாழைகள் 9ம் மாதத்திற்கு பிறகுதான் வாழைத் தார்கள் அறுவடைக்கு தயாராகும். அந்த காலகட்டத்தில் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு இருக்கும்.

வாழை சாகுபடி செய்து அதன் பயனை விவசாயிகள் பெறாத நிலையில், வங்கிகளில் வாங்கிய பயிர்கடனை திருப்பி செலுத்துவது என்பது இயலாத காரியமாகும். மோகனூர் பகுதியில் பூவன்ரகம், ரஸ்தாளி ரகம், கற்பூரவள்ளி ரகம் உள்ளிட்ட ரகங்களில் வாழை சாகுபடி நடைபெற்று வருகிறது. அனைத்து ரகங்களுமே 12 மாதங்களுக்கு பிறகே அறுவடைக்கு தயாராகும்.

இந்நிலையில் பயிர்கடன் தவணை காலம் 9 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பது விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் புதிய நடைமுறை நிச்சயம் மாற்றப்படும் என நம்புகிறோம். இவ்வாறு பாலமோகன் கூறினார்.

## <u>உடலுக்கு நன்மை தரும் சத்துள்ள தானிய உணவுகள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வுவேளாண் அதிகாரி தகவல்</u>

**புதுக்கோட்டை,** : உடலுக்கு நன்மை தரும் சிறுதானிய பயிர்கள் மற்றும் உணவுகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், வேளாண்மையில் தற்போது மீண்டும் சிறுதானியப் பயிர்களின் பரப்பளவை அதிகரிக்கவும் அதன் பயன்பாட்டினைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் தமிழக அரசால், வேளாண்

துறையின் மூலம் பாரம்பரிய உணவு வகைகளைப் பாதுகாத்திடும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறுதானிய வகையைச் சேர்ந்த வரகு, சாமை, தினை, குதிரைவாலி போன்ற பயிர் வகைகளைப் பற்றி நகர்புறத்தில் உள்ள இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், இப்பயிர்களின் தானியங்கள் நகர்ப்புறங்களில் சூப்பர் மார்க்கெட்டில் அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சிறுதானியங்களில் நம் உடலுக்குத் தேவையான புரதம், மாவுச்சத்து, தாது உப்புக்கள், நார்ச்சத்து போன்ற அனை த்து சத்துக்களும் அடங்கியுள்ளன. இவை பெண்கள், வளரும் குழந்தைகளுக்கு ஏற் படும் ஊட்டச்சத்துக் குறை பாடுகளை நிவர்த்தி செய்யும் தன்மையுடையவை.

சிறுதானியப் பயிர்களில் மனித உடல்நலத்திற்குத் தேவையான சத்துக்கள் அடங்கியுள்ளது குறித்தும், சிறுதானியப் பயிர்கள் மூலமாக இன்றைய தலைமுறையினருக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான உணவுகளும் தயார் செய்யப்பட்டு வருகிறது. இதில் 100 கிராம் கேழ்வரகில் மாவுச்சத்து 72 கிராம், புரதச்சத்து 7.3 கிராம், சுண்ணாம்புச்சத்து 344 மி.கிராம், பாஸ்பரஸ் 283 மி.கிராம், இரும்புச்சத்து 3.9 மி.கிராம், நார்ச்சத்து 19 கிராம் உள்ளது. உடல் வளர்ச்சிக்குத் தேவையான டிரிப்டோபேன், சிஸ்டின் மெத்தியோனின் போன்ற அமினோ அமிலங்கள் உள் ளது.

கேழ்வரகு உண்பதால் நீரிழிவு நோய் வராமல் தடுப்பது மட்டுமில்லாமல், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டினுள் வைக் கவும், கேழ்வரகில் நார்ச்சத்து உள்ளதால் ஜீரண சக்தியை அதிகமாக்கவும், ரத்தத்திலுள்ள தேவையில்லாத சர்க் கரை, கொழுப்பு பொருட் களை வெளியேற்றுகிறது, கேழ்வரகில் சுண்ணாம்புச் சத்து உள்ளது. இது எலும்பு வளர்ச்சிக்கும், எலும்பு தேய்மானத்தால் ஏற் படும் வலி, ஆர்த்தரைடீஸ் போன்ற நோயைக் குறைக்கவும் உதவுகிறது மற்றும் இரும்புச் சத்து இருப்பதால் ரத்த சோகை நோய் வராம லும் தடுக்கலாம், மேலும் கேழ்வரகில் கேழ்வரகுக் களி, கூழ், புட்டு, தோசை, இட்லி, இடியாப்பம், உப்புமா, அவல், முறுக்கு, கொழுக்கட்டை போன்ற உணவு வகைகளைத் தயாரிக்கலாம். இவ்வாறு ஷாஜகான் கூறினார்.

## பாரம்பரிய முறையில் கூடு வைத்து மீன் பிடிக்கும் மீனவர்கள்

**ராமநாதபுரம்**, : ராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் மீனவர்கள் பாரம்பரிய முறையை கைவிடாமல் கூடு வைத்து மீன் பிடித்து வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்ட கடற்பகுதியில் வல்லம், வத்தை எனப்படும் நாட்டுப்படகுகள் மற்றும் இன்ஜின் பொருத்திய நாட்டுப்படகுகளில் மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டுப்படகு மீனவர்கள் டிஸ்கோ, விளைமீன் வலைகளை பயன்படுத்தி மீன் பிடித்து வருகிறனர். நண்டு பிடிக்க நண்டு வலையும், சிங்கி இறால் பிடிக்க தனி வலையும், கணவாய் மீன் பிடிக்க தூண்டில்களும் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கோ, மீன்களின் இனப்பெருக்கத்திற்கோ பாதிப்பில்லை.

ஆனால் விசைப்படகு மீனவர்கள் இழுவலை மீன்பிடிப்பில் ஈடுபடுகின்றனர். அதிலும் அரசால் தடை செய்யப்பட்ட சுருக்குமடி, இரட்டைமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிப்பதால் கடலின் தரை வரை உள்ள மீன் முட்டைகள், குஞ்சுகள் முதல் அனைத்தையும் இழுத்து வந்து விடுகிறது. இதன் மூலம் மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்பட்டு, கடல் வளம் வெகுவாக குறைகிறது. வலைகள் கண்டுபிடிப்பதற்கு முன் கூடு வைத்து மீன் பிடிக்கும் பழக்கம் இருந்துள்ளது. இந்த முறையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை, ஏர்வாடி அருகே மாரியம்மன் நகர், சடையன்முனியன்வலசை, பி.எம்.வலசை, எம்.கே.வலசை உட்பட சில கடற்கரை கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் இன்றும் கூடு வைத்து மீன் பிடிக்கின்றனர்.

பனைவேர், பனை ஈர்க்கி, நாட்டு உடை மர குச்சி, இரும்புக்கம்பி கொண்டு செவ்வக வடிவில் 3 அடி நீளம் முதல் 6 அடி நீளம் வரை இந்த கூடு செய்யப்படுகிறது. இதில் ஒரு முகம், 2 முகம், 3 முகம் என பல்வேறு வகைகள் உள்ளன. முகம் என்றால் மீன் உள்ளே செல்லும் வழி.

இதன் வழியாக உள்ளே செல்லும் மீன் வெளியே வர முடியாது. மீனவர்கள் வந்து எடுக்கும் வரை மீன்கள் கூட்டிலேயே உயிருடன் இருக்கும்.

இந்த கூடு தயாரிக்க ரூ.ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரம் வரை செலவாகிறது. படகில் தீவுப்பகுதிகள், ஆழம் குறைந்த கடற்பகுதிகளுக்கு சென்று, பவளப்பாறைகளுக்கு இடையே இந்த கூடுகளை வைக்கின்றனர். அடுத்த நாள் சென்று கூட்டில் உள்ள மீன்களை எடுத்து வருகின்றனர்.

கூடு நிரந்தரமாக கடல் பகுதியிலேயே இருக்கிறது. கூட்டில் ஓரா, கிலாமீன், நகரை, கணவாய், விளைமீன் ஆகியவை சிக்குகின்றன. இதில் 750 கிராம் வரை எடையுள்ள மீன்கள் மட்டுமே சிக்கும். பெரிய மீன்கள் சிக்காது. இந்த முறையில் ஒரு மீனவருக்கு தினமும் ரூ.500 வரையே வருமானம் கிடைக்கிறது. ஏர்வாடி பகுதியை சேர்ந்த மீனவர்கள் கூறுகையில், “இந்த முறையில் மீன் பிடிப்பதால் மீன்களின் இனப்பெருக்கத்திற்கோ, சுற்றுச்சூழலுக்கோ எந்த பாதிப்பும் இல்லை. குறைந்த வருமானம் கிடைத்தாலும், பாரம்பரிய முறையை விடாமல் கடைபிடிக்கிறோம் என்ற திருப்தி உள்ளது. துபாய், ஓமன் உட்பட சில நாடுகளிலும் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கூடு வைத்து மீன் பிடித்து வந்தனர். தற்போது இருக்கிறதா என்பது தெரியவில்லை“ என்றனர்.

## <u>விதைப்பண்ணை அமைக்க வேளாண்துறை அறிவுறுத்தல்</u>

**சிவகங்கை,** : சிவகங்கை மாவட்டத்தில் கோடை மழை பெய்து நிலத்தில் போதிய ஈரம் இருப்பதால் விவசாயிகள் விதைப்பண்ணை அமைக்க வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.

மாவட்ட விதைச்சான்று விதை இயக்குநர் இளங்கோவன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது. தற்போது போதிய ஈரம் உள்ளதால் இதை பயன்படுத்தி குறைந்த நீர் தேவையை உடைய குறுகிய கால பயிரான பயறு வகைகளில் விதைப்பண்ணை அமைக்கலாம். பயறு வகைகளில் வம்பன்3, விபிஎன்4, விபிஎன்5 போன்ற உளுந்து ரகங்கள், மேஎம்2, விபிஎன்2 பாசிப்பயறு ரகங்களில் விதைப்பண்ணை அமைத்திடலாம்.

விதைப்பண்ணை அமைக்க தேவையான ஆதார நிலை விதைகள¬ வேளாண் விரிவாக்க மையங்களிலம், விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் பெற்றிடலாம்.

விதைக்கும் முன் ஒரு கிலோ பயறு விதைக்கு 4 கிராம் டிரகோடெர்மா விரிடி என்ற உயிரின பூஞ்சான மருந்தை கலந்து விதைக்க வேண்டும். விதைத்த 35 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட விதைப்பண்ணைகளை பதிவு செய்ய வேண்டும். விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் மகசூல், அரசு வழங்கும் பிரிமியம் மற்றும் விதை உற்பத்தி மானியம் கிடைக்கும். இதனால்

விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது. விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநரை அணுகவும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மார்க்கெட்டிற்கு வரத்து குறைவால் கோவில்பட்டியில் மாம்பழம் விலை உயர்வு

**கோவில்பட்டி**, :கோவில்பட்டி மார்க்கெட்டில் வரத்து குறைவால் மாம்பழம் விலை அதிகரித்துள்ளது.

கோவில்பட்டி நகராட்சி தினசரி மார்க்கெட்டுக்கு ஆண்டுதோறும் சீசன் காலங்களில் தேனி, திண்டுக்கல், வத்தலக்குண்டு, செங் கோட்டை, தென்காசி மற்றும் கேரளாவில் இருந்து மாம்பழங்கள் லாரிகள் மூலம் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு இப்பகுதிகளில் போதிய மழை பெய்யாததால் மாம்பழம் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் விலையும் அதிகரித்துள்ளது. கோவில்பட்டி மார்க்கெட்டில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாம்பழங்கள் விலை சற்று அதிகரித்துள்ளது. தற்போது மார்க்கெட்டில் ஒரு கிலோ சப்போட்டா மாம்பழம் கடந்த ஆண்டு ரூ.40க்கு விற்றது ரூ.60க்கும், கிளிமூக்கு ரூ.20க்கு விற்றது மாம்பழம் ரூ.35க்கும், மல்கோவா மாம்பழம் ரூ.30க்கு விற்றது ரூ.40 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது கோடை காலம் என்பதால் மாம்பழங்கள் விளைச்சல் குறைந்தாலும், வரும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மாம்பழம் சீசன் என்பதால் இம்மாதங்களில் மாம்பழங்களின் விளைச்சல் அதிகரித்து விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரி கள் தெரிவித்தனர்.

## நவீன தொழில்நுட்பத்தில் கத்தரி சாகுபடி மூலம் அதிக லாபம்

**செய்துங்கநல்லூர்**, :தெய்வச்செயல்புரத்தில் கத்தரி விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயி அதிக லாபம் சம்பாதித்துள்ளார். பருவமழை சரிவர பெய்யாததால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயம் தற்போது கேள்விகுறியாகி வருகிறது. 10 நாள் மழை பெய்தால் கூட தாமிரபரணியில் வரும் தண்ணீரால் இங்குள்ள 8 அணைக்கட்டு 11 கால்வாய்

மூலம் சுமார் 88 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெற்றுவிடலாம். இங்கு பிசானம், கார், முன்கார் போன்ற மூன்று சாகுபடியை செய்துவிடலாம். ஆனால் கால் வாய் பராமரிப்பு இன்மை, குளத்தினை ஆழப்படுத்தாத காரணம், போதிய மழை இன்மை போன்ற காரணங்களினால் ஒரு சாகுபடி விளைய வைப்பதே கடின மாக உள்ளது.

தமிழகத்தின் இரண்டாவது நெற்களஞ்சியம் என போற்றப்பட்ட நெல் லை, தூத்துக்குடி மாவட்டத்துக்கு தற்போது நெல் வெளி மாவட்டங்களில் இருந்தும் வெளிமாநிலத்தில் இருந்தும் இறக்குமதி செய் யும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மானாவாரி நிலங் கள் இங்கு மிக அதிகமாக உள்ளது. இங்கு பருத்தி, சோளம், கம்பு, வாழை, பூ பயிர், வெண்டை, கடலை பயிர் செய்யப்படுகின்றன. நிலத்தடி நீர் வற்றி போன காரணத்தினால் தற்போது அந்த விவசாயமும் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் விவசாயத்தினை விட்டு விட்டு வேறு தொழிலுக்கு மாறி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு அரசு மீண்டும் விவசாயம் செய்ய புதிய தொழில்நுட்பத்தினை உருவாக்கி வருகின்றனர். கருங்குளம் வட்டாரம் வேளாண்மைத்துறையின் அட்மா திடடத்தின் கீழ் தோட்ட கலை மூலமாக பண்ணைபள்ளி என்ற திட்டத்தினை தெய்வசெயல்புரத்தில் ஏற்படுத்தினர். இதில் நெல்லை - தூத்துக்குடி மெயின்ரோட்டில் முருகன் என்பவருக்கு சொந்தமான இரண்டறை ஏக்கர் நிலத் தினை தேர்வு செய்தனர்.

அதில் மஹிகோ 91 என்னும் கத்தரி பயிரை நடவு செய் தனர். மேட்டுபாத்திகள் அமைத்து சொட்டுநீர் பாசனம் மூலம் பாசனம் செய்து வந்தனர். இந்த இடத்தில் வேலை செய்ய 25 விவசாயிகளை தேர்வு செய்தனர். அவர்களுக்கு நடவு, வேர்பிடித்தல், வள ரும் பருவம், பூ பூக்கும் பரு வம், காய்கள் உருவாக்கும், அறுவடை பருவம் என 6 முறை பண்ணைப்பள்ளி தொழில்நுட்ப பயிற்சிகளை நடத்தினர். மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறி, இனக்கவர்ச்சி பொறி அமைத்து காய் புழுக்களை கட்டுபடுத்தினர்.

மேலும் அவ்வப்போது பயிர்களுக்கு வேண் டிய மருந்துகளை செலுத்தினர். தற்போது அவருக்கு 89 டன் நல்ல திறண்ட நோயற்ற கத்தரி மகசூல் கிடைத்தது. இவருக்கு செலவு போக ரூ.3 லட்சம் லாபம் கிடைத்துள்ளது. இதுகுறித்து விவசாயி முருகன் கூறுகையில், எங் கள் ஊரில் போதிய நிலத்தடி நீர்

இல்லாமல் விவசாயத் தினை பலர் அப்படியே போட்டுவிட்டோம். சிலர் விளைநிலங்களை பிளாட் போட்டு விற்று வருகின்றனர். இந்நிலையில் தான் புதிய தொழில்நுட்ப மூலம் கருங்குளம் வட்டார தோட்டக்கலை துறை மூலமாக வேளாண்மைத்துறையின் அட்மா திட்டத்தின் கீழ் கத்தரி பயிர் செய்தேன்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>“புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவதன் மூலம் விவசாயத்தில், இந்தியா மேலும் வளர்ச்சி பெறும்” இஸ்ரேல் தூதரக அதிகாரி நம்பிக்கை</u>**




**ஓசூர்,**

புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவதின் மூலம் விவசாயத்தில் இந்தியா மேலும் வளர்ச்சியை பெறும் என்று ஓசூரில், இந்தியாவிற்கான இஸ்ரேல் நாட்டு தூதரக அதிகாரி மெனாஹம் ஹனாபி கூறினார்.

<u>ஒப்பந்தம்</u>

இந்தியாவும், இஸ்ரேல் நாடும் விவசாயம் தொடர்பாக கடந்த 2008-ம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் படி விவசாயத்தில் இஸ்ரேல்

நாட்டில் தொழில் நுட்பம் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக வேளாண்மை சார்ந்த 30 மையங்கள் இந்தியாவில் நிறுவப்படுகிறது.

அதில் ஒன்றாக கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை தாலுகா தளி அருகே உள்ள கொட்டூர் கிராமத்தில் 55 ஏக்கர் பரப்பளவில் ரூ.8 கோடியே 80 லட்சம் செலவில் கொய்மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கான பயிற்சி மையம் நிறுவப்படுகிறது.

<u>நேரில் ஆய்வு</u>

இதற்கான பணியை ஆய்வு செய்வதற்காக இந்தியாவிற்கான இஸ்ரேல் நாட்டின் தூதரக அதிகாரி மெனாஹம் ஹனாபி, அந்நாட்டின் விவசாய ஆலோசகர் டேனியல் வெர்னர் ஆகியோர் நேற்று ஓசூர் வந்தனர். அவர்கள் தளி அருகே உள்ள கொட்டூர் கிராமத்திற்கு சென்று அங்கு அமைக்கப்பட்டு வரும் பணிகளை பார்வையிட்டார்கள்.

இதைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் ஓசூரில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இதற்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில் ஓசூர் சுற்று வட்டாரத்தில் மலர்கள் சாகுபடி செய்யப்படுவது குறித்தும், எந்தெந்த மலர்கள் இங்கு சாகுபடி செய்யப்படுகிறது என விளக்கப்பட்டது.

இந்த கூட்டத்தை தொடர்ந்து இந்தியாவிற்கான இஸ்ரேல் நாட்டு தூதரக அதிகாரி மெனாஹம் ஹனாபி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

<u>மேலும் வளர்ச்சி பெறும்</u>

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளியில் கொய்மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கான பயிற்சி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. அதை நான் பார்வையிட்டேன். இந்த பணிகள் குறித்த காலத்திற்கு முன்னதாகவே முடியும் தருவாயில் உள்ளது. பணிகள் திருப்திகரமாக உள்ளது.

இஸ்ரேல் விவசாய தொழில் நுட்ப வளர்ச்சி பெற்ற நாடு. எங்களது தொழில் நுட்பத்தை இந்தியாவுடன் இணைந்து நாங்கள் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். முதலில் பரீச்சார்த்த முறையில் இதை மேற்கொண்டோம். இஸ்ரேல் நாட்டின் விவசாய தொழில் நுட்பத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்துவதின் வாயிலாக இங்கு விவசாயம் மேலும் வளர்ச்சி பெறும் என்று நம்புகிறேன்.

தரமான மலர்கள்

அதே போல இந்த பகுதி மலர் சாகுபடிக்கு பெயர் பெற்ற இடமாக உள்ளது. இங்கு புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்திவதின் வாயிலாக தரமாக மலர்களை அதிக அளவில் சாகுபடி செய்ய முடியும். இந்தியா விவசாயத்தில் முன்னணியில் உள்ள நாடாக திகழ்கிறது.

இந்த நாட்டில் விவசாயிகள் அதிக அளவில் உள்ளார்கள். எங்கள் நாட்டின் புதிய தொழில் நுட்பங்களை இங்கு நாங்கள் அறிமுகப்படுத்திவதின் வாயிலாக மேலும் விவசாயத்தை பெருக்க முடியும்.

விவசாயிகள் பயன்

தென் இந்தியாவில் தமிழ்நாட்டில் மலர் சாகுபடிக்கான விவசாயிகளுக்கு தளியில் பயிற்சி மையமும், காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு திண்டுக்கல்லிலும் என 2 இடங்களில் மையங்கள் தொடங்கப்படுகிறது. இதே போல மராட்டியம், ராஜஸ்தான், பஞ்சாப், குஜராத், கர்நாடகா, உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களிலும் விவசாயிகளுக்கான பயிற்சி மையங்கள் தொடங்கப்படுகிறது.

இந்த பயிற்சி மையத்தின் வாயிலான பயன் பெறும் விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்தை பெற முடியும். மேலும் இந்தியா - இஸ்ரேல் ஆகிய நாடுகள் விவசாயம் தொடர்பாக மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும். குறைந்த நிலப்பரப்பில், குறைந்த அளவு தண்ணீரில் அதிக அளவில் சாகுபடி செய்ய முடியும். அதே போல எல்லா காலங்களிலும் எல்லா வகையான பயிர்களையும் பயிரிட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

500 போலீசார் பாதுகாப்பு

முன்னதாக நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் ஓசூர் உதவி கலெக்டர் பிரவீன் பி.நாயர், தாசில்தார் அமீதுல்லா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் தூதரக அதிகாரி மெனாஹம் ஹனாபி கார் மூலம் பெங்களூருக்கு புறப்பட்டு சென்றார்.

இந்தியாவுக்கான இஸ்ரேல் நாட்டின் தூதரக அதிகாரி ஓசூர் வந்ததை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கண்ணம்மாள் தலைமையில் ஓசூர் துணை போலீஸ் சூப்பிரண்டு கோபி மேற்பார்வையில் 500-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மாநில எல்லையில் இருந்து, ஓசூர் நகர பகுதி வரையிலும், தளி பகுதியிலும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

**அல்போன்சா மாம்பழம் மீதான தடைக்கு பிரிட்டனில் உள்ள இந்தியர்கள் எதிர்ப்பு**



இந்தியாவின் அல்போன்சா மாம்பழங்களுக்கு ஐரோப்பாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரிட்டனில் உள்ள இந்தியர்கள் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய யூனியன்

28 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய யூனியன், கடந்த மார்ச் மாதத்தில் இந்தியாவின் உயர்தர அல்போன்சா மாம்பழ இறக்குமதி மே மாதத்திலிருந்து நிறுத்தப்படும் என தெரிவித்தது. இந்திய மாம்பழங்களில் பூச்சித் தொற்று இருப்பதாக கூறி 2015 டிசம்பர் மாதம் வரை தடை விதிக்கப்படுவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது. மே 1–ந் தேதி இந்த தடை அமலுக்கு வந்தது. அதற்கு முன்பே மாம்பழம் இறக்குமதி மீதான தடையை நீக்குமாறு இந்திய அரசு கோரிக்கை விடுத்தது. ஆனால் ஐரோப்பா செவிசாய்க்கவில்லை.

இந்நிலையில் இங்கிலாந்தில் உள்ள இந்தியர்கள் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதற்காக அங்கு ஒரு கையெழுத்து இயக்கமே நடைபெற்றுள்ளது. 2,300–க்கும் அதிகமான இந்தியர்கள் கையொப்பமிட்ட மனு ஒன்று பிரிட்டன் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் அல்போன்சா மீதான தடையை மறுபரிசீலனை செய்யுமாறு இந்தியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐரோப்பாவிலேயே இங்கிலாந்தில்தான் இந்திய மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அந்த நாட்டின் 6 கோடி மக்கள்தொகையில் 14 லட்சம் இந்தியர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 2013–ஆம் ஆண்டில் மட்டும் இந்தியர்கள் உள்பட இங்கிலாந்து குடிமக்கள் அனைவரும் 1.20 கோடி மாம்பழங்களை ருசித்து மகிழ்ந்ததாக தெரிகிறது.

இந்த ஆண்டில் இந்தியாவில் மாம்பழ சீசன் தொடங்கியுள்ள நேரத்தில் அங்கு தடை அமலுக்கு வந்துள்ளது. 2015 டிசம்பர் வரை நீடிக்க உள்ள தடையால் பிரிட்டனில் உள்ள பழ விற்பனையாளர்களுக்கு 1.68 கோடி டாலர் அளவிற்கு நஷ்டம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

உற்பத்தியில் முதலிடம்

சர்வதேச அளவில் மாம்பழ உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. உலகின் மொத்த மாம்பழ மகசூலில் இந்தியாவின் பங்கு சுமார் 50 சதவீதமாகும். 2014–ஆம் ஆண்டில் நம் நாட்டில் 16 லட்சம் டன் மாம்பழங்கள் விளையும் என

எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த அளவில் 60 ஆயிரம் டன் மாம்பழங்கள் ஏற்றுமதியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்றுமதியாகும் மாம்பழங்களில் 80 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கிறது.

**<u>தூத்துக்குடியில் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் பிடிபடும் சாளை மீன்கள்</u>**



தூத்துக்குடியில் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் அதிக அளவில் சாளை மீன்கள் பிடிபடுகின்றன.

<u>நாட்டுப்படகு</u>

தமிழ்நாட்டில் விசைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடைக்காலம் அமலில் உள்ளது. இதனால் நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் கடலுக்கு சென்று, மீன்பிடித்து வருகின்றனர். இதன் காரணமாக மீன்களின் விலை அதிகரித்து உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் ஏராளமான மீனவர்கள் நாட்டுப்படகுகள் மூலம் மீன்பிடித்து வருகின்றனர்.

<u>சாளை மீன்கள்</u>

இந்த நிலையில், தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம் கடற்கரை பகுதியில் உள்ள மீனவர்கள் நாட்டுப்படகு மூலம் மீன்பிடித்து வந்தனர். அவர்கள் வலைகளில் சாளை மீன்கள் ஏராளமாக பிடிபட்டு இருந்தன.

ஒரு கூடை சாளை மீன்கள் ரூ.900 முதல் ரூ.950 வரை விற்பனையானது. அதே நேரத்தில் தேவைக்கு அதிகமாக சாளை மீன்கள் பிடிபடுவதாக மீனவர்கள் கூறுகின்றனர். அந்த மீன்களை கருவாடு தயாரிக்க அனுப்பி வைக்கின்றனர்.

**குளச்சலில் மீனவர்கள் வலையில் ஏராளமாக சிக்கிய நெத்திலி மீன்கள்**



**குளச்சல்,**

குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கடலுக்கு சென்ற கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்கள் நேற்று அதிகாலை கரை திரும்பின. அவற்றில் கடலுக்குள் மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் வலைகளில் ஏராளமான நெத்திலி மீன்கள் சிக்கின. அதிகமாக நெத்திலி மீன்கள் கிடைத்ததால் அவை மலிவான விலைக்கு விற்கப்பட்டது.

நெத்தலி மீன்கள் முழுமையாக விற்பனையாகாததால் மீனவ பெண்கள் அந்த நெத்திலி மீன்களை கருவாடாக மாற்ற கடற்கரையில் உலர வைத்தனர்.

இதனால் குளச்சல் கடற்கரை எங்கும் நெத்திலி மீன்களாக காணப்பட்டது.